Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா 5-00


யாழ்ப்பாணம்


# ஈழநாதம்

THE EELANAATHAM — Peoples Daily — மக்கள் தினசரி

நாதம் 08 | திருவள்ளுவர் ஆண்டு 2028 | ஐப்பசி 05 | ( 21 - 10 - 1992 ) | புதன்கிழமை | ஓசை 246


## பாடசாலை அனுமதிமுறை திருத்தி அமைக்க திட்டம்

பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் பற்றிய சுற்று நிருபம் பரந்த அளவில் திருத்தி அமைக்கப்படவிருக்கிறது என்று கல்வி உயர்கல்வி அமைச்சு பாடசாலை அபிவிருத்திப் பகுதி அறிவித்துள்ளது. அதை வெளியிடும் வரை, 1993 ஆம் வருடத்துக்கு மாணவரை அனுமதித்தலில் 1990/21 ஆம் சுற்று நிருபத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது. பாடசாலை அபிவிருத்திப் பகுதி சில அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளது. ஒருவர் பாடசாலையின் பழைய மாணவனாக-மாணவியாக இருந்தால், பழைய மாணவர் சங்கத்தோடு தொடர்பு கொண்டிராவிட்டாலும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இலகு கடன் அடிப்படையில் ஆயுதம் வாங்க அரசு முயற்சி

## சீனா உதவி வழங்க தயாராம்

(கொழும்பு)

நீண்டகால இலகு கடனடிப்படையில் உலக நாடுகளில் இருந்து யுத்த தளபாடங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் சிறிலங்கா அரசாங்கம் தீவிர அக்கறை காட்டி வருவதாகத் தெரியவருகின்றது. அரசாங்கத்தின் இம் முயற்சிக்கு சீனாவிடம் இருந்தும், சில கிழக்குஐரோப்பிய நாடுகளிடம் இருந்தும் சாதகமான பதில்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாரிய நிதி நெருக்கடியை சிறிலங்கா அரசாங்கம் எதிர் நோக்குகின்ற வேளையிலும், யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு சிறிலங்கா அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளமையால், சுமார் 500கோடி ரூபா பெறுமதியான போர் தளபாடங்களை நீண்டகால கடனடிப்படையில் வாங்கும் தீவிர முயற்சியில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

சிறிலங்காவின் இம் முயற்சிக்கு சீனாவிடமிருந்தும், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிடம் இருந்தும் சாதகமான பதில்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந் நாடுகள் சிறிலங்கா கோரும் யுத்ததாங்கிகள், பீரங்கிபொருத்தப்பட்ட உலங்குவானூர்திகள், மற்றும் ஏவுகணைகள் பொருத்தப்பட்ட பீரங்கிப் படகுகள், சிறு தானியங்கி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## எல்லையோர முஸ்லிம்களுக்கு ஆயுதப்பயிற்சி வழங்க முடிவு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் எல்லைப் புற சிங்கள - முஸ்லிம் கிராமங்களில் வசிப்போருக்கு சிறிலங்கா அரசாங்கம் ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்டிருக்கும் வேட்டைத் துப்பாக்கிகளுக்கு பதிலாக 303 ரக ரைபிள்கள் வழங்கப்படும் என்றும் அரச வட்டாரங்கள் கூறியுள்ளன.

அத்துடன் எல்லைக் காவற் படையில் அவ்வப்பகுதி இளைஞர்களை தெரிவுசெய்து இராணுவ பயிற்சி அளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்

## வடக்கு - கிழக்கு யுத்தத்தை நிறுத்த முடியாது திணறல்

## மாவீரர் குறிப்பேடு

நாளை முதல் ஈழநாதத்தின் இணைப்பாக மாவீரர் குறிப்பேடு வெளியாகவுள்ளது. ஒரு புத்தகமாகச் சேர்த்துக் கட்டக் கூடிய விதத்தில் தினசரி எட்டுப் பக்கங்கள் வெளியாகவுள்ளன. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுவே—''மண்மீட்புக்காய்உயிர்நீத்த மாவீரர் குறிப்பேடு'' என்று காணப்படும் தலைப்புக்கு மேல் உள்ள மடிப்பை வெட்டி விடுங்கள். இதன் மூலம் தொடர்ச்சியான எட்டுப் பக்கங்கள் உங்களுக்குக் கிடைக்கும்.

நாளை முதல் தினசரி உங்கள் ஈழநாதம் முகவரிடம் ஈழநாதத்துடன் இணைப்பையும் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## வீரச்சாவு



## கிளாலி கடலில் சூடு படகுகள் திசைமாறின

கிளாலிக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் கிளாலி-ஆலங்கேணிக்கும் இடையிலான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

இதேவேளை, சில படகுகள் கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளானதாகவும் வதந்திகள் பரவின. ஆனால், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து ஒரு படகு திசை மாறிச் சென்றதாயினும் பின்னர், அப்படகும் பாதுகாப்பாகத் திரும்பியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### குமண வந்தது

யாழ். குடாநாட்டிற்குத் தேவையான ஒரு தொகுதி அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் ''குமண'' கப்பல் நேற்றுக்காலை பருத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள பாட்டு கேட்டதும் ஆபத்தை உணர்ந்து கொண்டோம்

### கிளாலியில் திசைமாறிய மாணவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கழுத்து மட்டத்திலான கடலில் நீண்ட தூரம் நடந்து சென்று கரையை அடைந்தோம் கரையில் உள்ள மணல் மேட்டில் சற்று நேரம் ஓய்வெடுத்தோம் சடுதியாக சிங்களப்பாட்டு காதைப்பிளக்கும் வகையில் ஒலித்தது அப்போது தான் ஆபத்தின் விளிம்பில் இருப்பதை நாம் உணர்ந்துகொண்டோம்'' இவ்வாறு சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்கு அஞ்சி ஆனையிறவு முகாமின் எல்லைவரை சென்று திரும்பிய பல்கலைக் கழக மாணவன் தேவராஜா என்பவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நேற்று முன்தினம் இரவு கிளாலியில் இருந்து சுமார் 18 பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட மேலும் பல பொது மக்களுடன் இரண்டு படகுகளில் பயணத்தை ஆரம்பித்தோம் இப் படகுகள் பூநகரி கரைக்கு அண்மையாகச் சென்றுகொண்டிருந்த சமயம் கடற்படையினரின் பீரங்கிப் படகு ஒன்றில் இருந்து சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது இதனால் அச்சமடைந்த பிரயாணிகள் அல்லோல கல்லோலமடைந்தனர் பயணிகள் சென்ற ஒரு படகு மீண்டும் கிளாலியை நோக்கி திரும்பியது தொடர்ந்தும் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் இதனால் இப்படகில் இருந்த பயணிகள் மேலும் பீதியடைந்தனர். இதனால் கடலில் குதித்து கழுத்து மட்டத்திலான நீரில் நடந்து சென்று ஒரு கரையை அடைந்தோம் அங்குள்ள மணல் மேட்டில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த சமயம்

(4 ஆம் பககம் பார்க்க)

## தற்காலிக எழுதுவினைஞர் சான்றிதழ் மீள்பரிசீலனை

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்களில் நியமிக்கப்பட்டிருக்கும் தற்காலிக எழுது வினைஞர்களது தகைமைச் சான்றிதழ்கள் மீள் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது

போட்டிப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்டு மாகாண எழுது வினைஞர் சேவைதிட்டத்தின் கீழ் தற்காலிகமாக இவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களது தகைமைச்சான்றிதள்கள் ஏற்கனவே யாழ். அரசாங்க அதிபர் மற்றும் ஏனைய திணைக்கள அதிகாரிகள் மட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட்டமை

## அகதிகளுக்கு உதவிப்பணம் ஜேர்மனியில் குறைப்பு

யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு சிறிலங்கா அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளமையால், சுமார் 500கோடி ரூபா பெறுமதியான போர் தளபாடங்களை நீண்டகால

கத் தெரியவருகின்றது.

சிறிலங்காவின் இம் முயற்சிக்கு சீனாவிடமிருந்தும், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிடம் இருந்தும் சாதகமான பதில்கள் கிடைக்

யுத்ததாங்கிகள், பீரங்கிபொருத்தப்பட்ட உலங்குவானூர்திகள், மற்றும் ஏவுகணைகள் பொருத்தப்பட்ட பீரங்கிப் படகுகள், சிறு தாணியங்கி

[3 ஆம் பக்கம் பார்க்க]

படும் தலைப்புக்கு மேல் உள்ள மடிப்பை வெட்டி விடுங்கள். இதன் மூலம் தொடர்ச்சியான எட்டுப் பக்கங்கள் உங்களுக்குக் கிடைக்கும்.

நாளை முதல் தினசரி உங்கள் ஈழநாதம் முகவரிடம் ஈழநாதத்துடன் இணைப்பையும் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.

களப்பாட்டு காதைப்பிளக்கும் வகையில் ஒலித்தது அப்போது தான் ஆபத்தின் விளிம்பில் இருப்பதை நாம் உணர்ந்துகொண்டோம்'' இவ்வாறு சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்கு அஞ்சி ஆனையிறவு முகாமின் எல்லைவரை சென்று திரும்பிய பல்கலைக்கழக மாணவன் தேவராஜா என்பவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நேற்று முன்தினம் இரவு கிளாலியில் இருந்து சுமார் 18 பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட மேலும் பல பொது மக்களுடன் இரண்டு படகுகளில் பயணத்தை ஆரம்

டது இதனால் அச்சமடைந்த பிரயாணிகள் அல்லோல கல்லோலமடைந்தனர் பயணிகள் சென்ற ஒரு படகு மீண்டும் கிளாலியை நோக்கி திரும்பி

நடந்து சென்று ஒரு கரையை அடைந்தோம் அங்குள்ள மணல் மேட்டில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த சமயம்

(4 ஆம் பககம் பார்க்க)

# எல்லையோர முஸ்லிம்களுக்கு ஆயுதப்பயிற்சி வழங்க முடிவு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் எல்லைப் புற சிங்கள - முஸ்லிம் கிராமங்களில் வசிப்போருக்கு சிறிலங்கா அரசாங்கம் ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்டிருக்கும் வேட்டைத் துப்பாக்கிகளுக்கு பதிலாக 303 ரக ரைபிள்கள் வழங்கப்படும் என்றும் அரச வட்டாரங்கள் கூறியுள்ளன.

அத்துடன் எல்லைக் காவற் படையில் அவ்வப்பகுதி இளைஞர்களை தெரிவுசெய்து இராணுவ பயிற்சி அளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

புதிதாக கிராமங்களில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள இராணுவ முகாம்களில் இந்த எல்லைக் காவல் படையினர் இராணுவ படைப் பிரிவினருடன் இணைந்து பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

(3-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு யுத்தத்தை நிறுத்த முடியாது திணறல்

**- மகிந்தராஜபக்ஷ**

(மாத்தறை)

சிறிலங்கா அரசு தெற்கில் பயங்கரவாதத்தை ஒழித்து விட்டதாக மார்தட்டுகிறது. ஆனால் அது வடக்குக் கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை முடித்து அப்பகுதியில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்திக் கொடுக்காது ஏதேதோ உளறி வருகிறதென மனித உரிமைகள் அமைப்புச் செயலாளரும் அம்பாந்தோட்டை மாவட்ட எம். பியுமான மகிந்த ராஜபக்ஷ கூறினார்.

சுதந்திரக்கட்சியின் காரியக் கமிட்டிக் கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய ராஜபக்ஷ அங்கு தொடர்ந்து பேசுகையில்

(4-ம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



வீரவேங்கை
**கரிகாலன்**

27-09-92 அன்று ஆனையிறவு கடல் நீரேரியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரவேங்கை கரிகாலன் (சிதம்பரநாதன் காண்டீபன், கற்கோவளம், பருத்தித்துறை) வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## தற்காலிக எழுதுவினைஞர் சான்றிதழ் மீள்பரிசீலனை

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்களில் நியமிக்கப்பட்டிருக்கும் தற்காலிக எழுது வினைஞர்களது தகைமைச் சான்றிதழ்கள் மீள் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது

போட்டிப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்டு மாகாண எழுது வினைஞர் சேவைதிட்டத்தின் கீழ் தற்காலிகமாக இவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களது தகைமைச்சான்றிதள்கள் ஏற்கனவே யாழ். அரசாங்க அதிபர் மற்றும் ஏனைய திணைககள அதிகாரிகள் மட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

இவர்களுக்கு தற்பொழுது

[3 ஆம் பக்கம் பார்க்க]

## அகதிகளுக்கு உதவிப்பணம் ஜேர்மனியில் குறைப்பு

வெளிநாட்டு அகதிகள் ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோருவதைக் குறைக்கும் முகமாக அகதிகளுக்கான உதவிப் பணம் குறைக்கப்பட்டுள்ளது. இக் குறைப்பு 27 சதவிகிதத்தால் நடைமுறைப் படுத்தப்படும் என்றும் தஞ்சம் கோரியிருக்கும் வெளிநாட்டு அகதிகள் விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுக்கப்படும் காலப் பகுதியில் இக் குறைப்பு அமுலாக்கப்படும் என்றும் ஜேர்மன் அரசாங்கம் அறிவித்துள்ளது.

## குழந்தை விற்பனை இல்லம் கொழும்பில் கண்டுபிடிப்பு

வெளிநாடுகளில் இலங்கைக் குழந்தைகளைவிற்பனை செய்வதை நோக்கமாகக் கொண்டு சகல வசதிகளோடும் செயற்பட்ட இல்லம் ஒன்றினை

(3 ஆம் பக்கம் பார்க்க,

# அவசரகால சட்ட விதிகள் நீக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

## எதிர்க்கட்சிகள் முஸ்தீபு

(கொழும்பு)

அவசரகால சட்ட விதிகளில் இன்னமும் நீக்கப்படாமல் அமுலில் இருக்கும் கடுமையான விதிகள் சிலவற்றை நீக்கக் கோரி பதின்மூன்று எதிரணிக்கட்சிகள் எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் வரும் 26 ஆம் திகதி ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்த விருக்கின்றன என்று கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையடுத்து அதே தினம் கிருலப்பனையில் இக் கட்சிகள் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தவும் திட்டமிட்டிருக்கின்றன

இதே நேரம் இந்த பதின்மூன்று எதிரணி கட்சிகளையும் உள்ளடக்கியதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் பொது முன்னணியொன்றுக்கான நகல் யாப்பு கட்சிகளின் தலைவர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

எதிர்க் கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா இவ்வாரம் கூட்டிய எதிரணி கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்திலேயே நகல் யாப்பு கையளிக்கப்பட்டது என்றும் பொது முன்னணியின் பெயர் என்னவென்று யாப்பில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்றும் கூறப்படுகிறது

சுயாதீனமான அரசியல் அமைப்புக்களின் கூட்டணியாக இந்தப்பொது முன்னணி இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மண்டைதீவில் கரும்புகை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவின் பல பாகங்களில் இருந்தும் நேற்று முன்தினம் கருநிறப்புகை கிளம்பியவண்ணம் இருந்தது.

இச் சம்பவத்தை கொழும்புத்துறை, குருநகர் ஆகிய இடங்களில் நின்று அவதா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மத்திய வங்கி முன்னாள் ஆளுநர்; பணமோசடி அம்பலம்

(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரின் பணமோசடி தொடர்பாகவும் ஆவண மோசடிதொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது

இது பற்றி தெரியவருவதாவது மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதிநெவில் கருணதிலக்கவின் பதவிக் காலத்தில் மத்திய வங்கியின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட பணத்தில் மூன்று கோடி ரூபா செலவழிக்கப்பட்டதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மத்திய வங்கியின் அந்தரங்க ஆவணங்கள் அடங்கிய மூன்று அலுமாரிகள் இரவோடிரவாக காணமால்போய் விட்டதாகவும் மற்றொரு அலுமாரி இவரது வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் அலுமாரிகள் கடத்தப்பட்டதில் மத்திய வங்கியின் சில ஊழியர்கள், பாதுகாப்பு ஊழியர்களின் ஒத்துழைப்பும் அவருக்கு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து பலதகவல்கள் கிடைத்திருப்பதாகவும் மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை சென்றல் காம்பில்

## புலிகளின் சூட்டுக்கு ஒரு பொலிஸ் பலி

(அம்பாறை)

அம்பாறை சென்றல் காம்ப் பொலிஸ் நிலையத்தின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் பலியானார் என சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

டி. எம். திலகரத்ன என்ற இவர் பொலிஸ்நிலைய வாயிலில் நின்றபோது சூட்டுக்குப் பலியானார்.

# சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தால் அதனையும் ஆதரிப்போம்

**- அஷ்ரப்**

(கொழும்பு)

புலிகளை எதிர்த்து யுத்தம் புரியும் படையினரை ஆதரிக்கிறோம் அதனாலேயே அவசர காலச் சட்டத்தை ஆதரிக்கிறோம். ஐக்கிய தேசியக்கட்சி மாறி சுதந்திரக்கட்சிபதவிக்கு வந்து யுத்தம் நீடித்தாலும் அவர்களை நாம் ஆதரிப்போம்.

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் தெரிவித்துள்ளார். பத்திரிகையாளரின் கேள்வி ஒன்றுக்கு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொலநறுவைச்சம்பவத்தை ஆட்சேபித்து மாகாண சபை உறுப்பினர் பதவியை ஒருவர் ராஜினாமாசெய்துள்ளார் அது போல் முஸ்லிம் காங்கிரஸ் எம். பிக்கள் யாராவது பதவி துறப்பீர்களா எனக் கேட்ட போது, ''சிறுபான்மையினரான எமது குரல்களை அங்கு தானே ஒலித்துக் கொண்டிருக்கிறோம்'' என்று பதிலளித்தார்.

கடைகள், நிறுவனங்களை மூடச் சொல்லிவிட்டு அன்று பாராளுமன்றத்திற்கு செல்வது சரியா எனக் கேட்ட போது பாராளுமன்றம் கூடினால் தானே பிரச்சினைகளைப் பேசலாம்'' என தெரிவித்தார்.

## தொண்டராசிரியர் நியமனம் மேன்முறையீடு செய்யலாம்

நிரந்தரமாக்கப்படாத தொண்டர்ஆசிரியர்கள் இன்று அல்லது நாளை தமது மேன்முறையீட்டை நல்லூரில் அமைந்துள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைமைப் பணிமனையில் பொதுச் செயலாளரிடம் நேரடியாகச் சமர்ப்பிக்கலாம் என சங்க பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகளை அடுத்த வாரம் கொழும்பு சென்று கல்விச் சேவைச் சபைத் தலை

( 3ஆம் பக்கம் பார்க்க)

**வீதியெங்கும் மரம் நடுவோம்**
**விழிபோலக் காத்திடுவோம்**

## வரி விளம்பரம்


### தரன் ஸ்ருடியோ

குறைந்த சலார் குறித்த நேரம் தீபாவளித் தினத்தை முன்னிட்டு 9-10-92.27-10-92 வரை சகலவித போட்டோ மற்றும் வேலைகட்கு 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3334)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்கா வாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

### மலிவு விற்பனை

தீபாவளித் திருநாளை முன்னிட்டு றெடிமேட் ஸ்கேட், பிளவுஸ். சிங்கப்பூர் கவுண்கள், சூட்டிங் சேட்டிங் வகைகள் இன்று தொடக்கம் 25-10-92 வரை மலிவு விலையில் கிடைக்கும், தவற விடாதீர்கள். துர்க்கா றெக்ஸ் 164, நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம்.

(சி-5251)

### ஜெயா அழகு சாதன மாளிகை

எவர் சில்வர், பிளாஸ்ரிக், தையல் உபகரணங்கள் பன்சி கூட்ஸ் பொருள்கள். மொத்த சில்லறை விற்பனை நிலையம். ஜெயா அழகு சாதன மாளிகை 177 - மின் சார நிலைய வீதி 160, நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம். (சி-5250)

### திருமண சேவை

பொருத்தமான மணமகள்/மணமகன் தேடுபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும் மங்களாஏஜென்சி கொய்யாத்தோட்டம். சந்திப்பு ஞாயிறு காலை (3494)

### தேவை (Wanted Tailors)

ஆண்களுக்குரிய ஆடைகள் தைக்கக்கூடியவர்கள் உடன் தேவை தொடர்பு 182, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (3497)


### அவுஸ் உயர் ஸ்தானிகர் வவுனியா விஜயம்

இலங்கையிலுள்ள அவுஸ்ரேதிலிய உயர் ஸ்தானிகர் கடந்த சனியன்று வவுனியாவுக்கு விஜயம் செய்துள்ளார். அங்கு வவுனியாப் பிரதேச இராணுவ இணைப்பதிகாரி, மற்றும் அரசாங்க அதிபர் உட்பட பலரையும் சந்தித்து வவுனியாப் பிரதேச நிலைமைகள் குறித்து ஆய்வுகள் நடத்தியுள்ளார்.

## நீர் இறைக்கும் யந்திரங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விவசாயத் திணைக்களத்திற்கு சுமார் 320 நீர் இறைக்கும் இயந்திரங்கள் எடுத்து வரப்படுகின்றன.

''குமண'' கப்பலிலேயே இவை எடுத்துவரப் படுகின்றன.

இவற்றில் குபேட்டா இனத்தைச் சேர்ந்த 100 இயந்திரங்களும், என்பில்ட் இனத்தைச் சேர்ந்த 40 இயந்திரங்களும், றொபின் இனத்தைச் சேர்ந்த 180 இயந்திரங்களும் அடங்குகின்றன. (பா)

## ஹாட்லிக்கல்லூரி பரிசளிப்பு விழா

(வடமராட்சி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 17-ம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு கல்லூரி அதிபர் திரு பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக உதவிக் கல்விப்பணிப்பாளர் (ஆங்கிலம்) திரு திருமதி டி. ஆர். அருமைநாயகம் கலந்து கொண்டனர் சாரணர் அணி வகுப்புடன் பிரதம விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர்.

பரிசில்களை திருமதி டி ஆர். அருமைநாயகம் வழங்கினார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (82)

## நினைவு கூருகின்றோம்... 1992-10-21

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் எதிர்பாராத விதமாக கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த -

**கிளியன்** (பராக்கிரமலிங்கம் - விசுவமடு-முல்லைத்தீவு)

**தவநாதன்** (மாசிலாமணி கிருஷ்ணதாஸ் - பன்குளம் திருக்கோணமலை)

1987ஆம் ஆண்டு யாழ். கோண்டாவில் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். கேணல் சந்தோசம்** (கணபதிப்பிள்ளை உமைநேசன் - 103, சந்தோசம் வீதி, அரியாலை-யாழ் )

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மிய பகுதியில், இந்தியப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லிங்கேஸ்** (மகாலிங்கம் லிங்கேஸ்வரன் - உரும்பராய் - யாழ்.)

யாழ். மருத்துவமனைக்குள் புகுந்த இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட மருத்துவர்கள், ஊழியர்கள், நோயாளிகள் உட்பட பல தமிழர்கள்.

உரும்பராயில், இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 சிறுவர்கள் உட்பட 6 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு மட்டு - கல்லடிப் பகுதியில், இந்தியப் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய -

**2-ம்லெப். திலக்** (யே. குபேந்திரன்- கல்லடி - மட்டக்களப்பு)

மட்டு - கல்லடிப்பகுதியில், இந்தியப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**உதயன்** (சி. உதயகுமார் - நாவற்குடா, மட்டக்களப்பு)

ஊர்காவற்துறையில் இந்தியப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**உதயன்** (தெய்வேந்திரன் உதயசூரியன் - காரைநகர், யாழ் )

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய -

**வெங்கட்/செல்வா** (மகேந்திரன் யூட் மரியான் செல்வராஜன் - 40/05, கோயில் வீதி ஒழுங்கை, யாழ் )

வல்லைவெளியில், தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட -

தமிழீழ மக்கள் மன்றத் தலைவரும்-நாட்டுப்பற்றாளருமான ''மாமனிதர்''

**க. சிவானந்தசுந்தரம்**

1989 ஆம் ஆண்டு அம்பாறையில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில், சிறிலங்காபடையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**லிங்கம்** (முத்தையா மோகனராஜ் - இட்டாம்பிட்டிய)

**முத்து**

1991ஆம் ஆண்டு யாழ் - மண்டைதீவுப்பகுதியில், சிறிலங்காபடையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். பேபி** (கந்தையா பஞ்சலிங்கம் - களபூமி, காரைநகர், யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

[சி-5257]

## தென்பகுதி பல்கலையில் தமிழ் மாணவர் அவதி

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் நிலவும் போர் சூழலைக் காரணம் கூறி தென் பகுதிக்குச் சென்ற பல்கலைக் கழக மாணவர்கள் பல்வேறு வசதியீனங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பேராதனை, கொழும்பு ஆகிய பல்கலைக் கழகங்களில் இவ்வாறான சுமார் 125 மாணவர்கள் கல்வி பயிலுகிறார்கள். இவர்களுக்கு நூலக வசதி, தங்குமிட வசதி உட்பட பல்வேறு வசதிகள் வழங்கப் படுவதில்லை இதனால் இவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். (க)

# ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மாபெரும் கெரில்லாப் போராட்ட வீரனும்
முன்னாள் திருமலை மாவட்டத்
தளபதியுமான

## லெப். கேணல் 'சந்தோசம்' (மாஸ்டர்)

(கணபதிப்பிள்ளை உமைநேசன்)

அரியாலை

வீரப் பிறப்பு : 14-01-1959

வீரச்சாவு : 21-10-1987



மாபெரும் கெரில்லாப் போராட்ட வீரனும்
முன்னாள் திருமலை மாவட்டத்
தளபதியுமான


# லெப். கேணல் 'சந்தோசம்' (மாஸ்டர்)

## (கணபதிப்பிள்ளை உமைநேசன்)

அரியாலை

வீரப் பிறப்பு : **14-01-1959**

வீரச்சாவு : **21-10-1987**



## தமிழீழ மண்ணின் பேறு!

அரியாலை ஈன்றளித்த "உமை(யின்)நேசன்'
அழகுமகன் "சந்தோசம்" புரட்சிவீரன்!
எரிகின்ற தமிழீழ மண்ணை மீட்டு
எடுத்திடவே! புலியாகிக் களத்தில் பாய்ந்
தோன்!
விரிவான "பல்கலைகள்" பயிலும் வேளை
விடுதலைக்காய் அதைவிடுத்த மண்ணின்
மைந்தன்!
சிரித்தாலோ அழகொழுகும், சினந்தால்
வேங்கை!
சிந்தனையில் தமிழீழம்ஒன்றே வைத்தோன்!

வடக்குமுதல் தெற்கீழம் வரையும் பாதம்
வைத்துநடை பயின்றியக்கம் வளர்த்து
நின்றோன்!
அடக்குமுறை சிங்களத்தின் படைகள் ஓட
அதிர்வுதரும் 'முதலடிகள்' பலவும் தந்தோன்!
இடர்சூழ்ந்த திருமலைமண் தன்னைக்காக்கும்
இணையற்ற தளபதியாய் இலங்கி நின்றோன்
சுடரனைய "சந்தோசம் மாஸ்டர்" புகழைச்
சொல்லிவிடக் கவிதையிலே ஒன்றா நூறா?

தங்கநிகர் தலைவர்பிர பாவின் நெஞ்சம்
தனைக் கவர்ந்த போராளி! எதிரியான
சிங்களவர் கேட்டஞ்சும் பெருத்த வீரன்
சீராளன் தமிழீழ மண்ணின் பேறு!
எங்கிருந்தோ வந்த அயல் வெறியரான
இந்தியநாட் டுப்படையை எதிர்த்துமோதிச்
சங்கரித்தவேளையிலே! சாய்ந்தான்மண்ணில்!
சாயாது அவன் நாமம்! வாழும் நெஞ்சில்

திருமலை மாவட்டத் தொடர்பகம்
கேணியடி, கொக்குவில்

(சி-5256) பாவாக்கம் : நிலாதமிழின்தாசன்

யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

பிறரை ஏமாற்ற துணிந்து முனைபவன், தனக்கே சிலந்தி வலையைப் பின்னி விடுகிறான்.

- சர் வால்டர் ஸ்காட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 21-10- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## விவசாயிகள் பெயரில் ஒரு விழா

சிறிலங்கா அரசாங்கம் விவசாயிகள் தின விழாவை வருடாந்தம் கொண்டாடுவதற்கு தீர்மானித்துள்ளது. இதன் பிரகாரம் கடந்த 14ஆம் திகதியில் இருந்து நேற்று 20 ஆம் திகதி வரை இவ் விழாக்கள் பல பாகங்களிலும் நடைபெற்றன. விவசாய தினவிழாவை நினைவு கூரும் பிரதான விழாவும் கண்காட்சியும் ஹிங்கிராங் கொடையில் நடைபெற்றது.

இவ் விவசாய தின விழாவை ஒட்டி விவசாயிகளுக்கென சில சலுகைகளை அரசாங்கம் அறிவித்துள்ளது. இவ் விழாக்காலத்தில் உர வகைகளையும், கிருமி நாசினிகளையும், விவசாய உபகரணங்களையும் மலிவு விலையில் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

அதாவது, மகாபொல கொண்டாட்டங்கள், கம்முதாவக் கொண்டாட்டங்கள் வரிசையில் விவசாயிகள் விழா என்ற போர்வையில் ஓர் கொண்டாட்டத்திற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. பிரேமதாசா அரசாங்கத்தின் கொண்டாட்டங்கள் குறித்தும், அதன்மூலம் செய்யப்படும் பணவிரயங்கள் குறித்தும் எதிர்க்கட்சிகள் பலத்த கண்டனங்களை முன் வைத்துள்ள போதும் பிரேமதாசா அரசாங்கம் அதை அசட்டை செய்து வருகிறது.

இவ்வாறான விழாக்களினால் பிரேமதாசா அரசாங்கத்தின் கொண்டாட்டங்கள், பண விரயங்கள் எல்லாம் ஒரு புறம் இருக்க, போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிழக்குப் பகுதியிலும், வடக்கில் வவுனியா மாவட்டத்திலும் விவசாயிகள் தினவிழா கொண்டாட்டங்கள் நடைபெறும் என அரசாங்கம் அறிவித்தமை கேலிக்குரிய தொன்றேயாகும். அதாவது, தமிழ் மக்களிடம் இருந்து சிங்கள அரசாங்கம் எவ்வளவு தூரம் அந்நியப் பட்டுள்ளது என்பதை வெளிக்காட்டுவது

# தமிழகத்தில் சுவாமியின் செயல்களுக்கு நரசிம்மராவின் இரகசிய ஆசீர்வாதம் உண்டா?

## -தமிழக அரசியல் வட்டாரங்களில் சர்ச்சை

(சென்னை)

தமிழகத்தில் ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவின் இரகசிய ஆசீர்வாதம் உண்டா என்ற கேள்வி தமிழக அரசியல் வட்டாரங்களில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி முதல்வர் ஜெயலலிதாவின் ஆட்சியைக் கவிழ்த்தே தீருவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயற்பட்டு வருவது தெரிந்ததே.

குறிப்பாக முதல்வர் ஜெயலலிதாவின் அ.இ.அ.தி.முக, வினர் மத்தியில் சுவாமியின் நடவடிக்கைகள் பலத்த குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுப்பிரமணியம் சுவாமி தன்னிச்சையாக செயற்படுவதாக அ இ.அ.தி மு கவினர் கருதுவார்களேயானால் இத்தகைய குழப்பம் ஏற்படுவதற்கு காரணம் எதுவும் இருக்க முடியாது என்றும் சொல்லப்படுகிறது.

கடந்த தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. மகத்தான வெற்றியைப் பெற்றதன் பின்னர் தற்போது பாரதூரமான நிலையொன்றைத் தாண்ட வேண்டிய கட்டத்தில் இப்போதுதான் இருக்கிறது.

கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு ஜெயலலிதாவினால் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் அமைச்சர்களான கே. ராஜாராமும் வி. வி. சுவாமிநாதனும் சுப்பிரமணிய சுவாமியுடன் அணிசேர்ந்திருககின்றமை அ.தி.மு.கவுக்குள் அதிருப்தியாளர்கள் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்த்துவதாகவே உள்ளது.

ஜெயலலிதா தலைமையில் இருந்த அணியும் ஜானகி ராமச்சந்திரன் தலைமையில் இருந்த அணியும் ஒன்றாகச் சேர்ந்த பின்னர் ஜெயலலிதாவின் தலைமைத்துவத்திற்கு தோன்றியிருக்கும் முதன் முதலான கடுமையான சவாலாகக் கூட ராஜாராம்-சுவாமிநாதன் விவகாரத்தை சில அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

சுப்பிரமணியம் சுவாமியின் செயற்பாடுகள் தொடர்பாக அ.தி.மு.க.வின் சிரேஷ்ட வட்டாரங்களில் வேறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

சுவாமி தன் சொந்தத்தில் இயங்குகின்றார் என்றால் அவருக்கு தமிழ் நாட்டில் அரசியல் செல்வாக்கு இல்லை என்பதை அடிப்படையாகக் கொண்டு அவரைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.

காங்கிரஸ் அதன் இலக்குகளை அடைவதற்காக சுவாமியை பயன்படுத்துகின்றதென்றால், அல்லது எங்களை தொடர்ச்சியாக அச்சுறுத்தல் நிலையொன்றில் வைத்திருக்க காங்கிரஸ் விரும்புகிறதென்றால் அதை நாம் சற்று பாரதூரமான விடயமாகவே எடுக்க வேண்டும் என்று அ. தி மு. க. வின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் கூறினார்.

தமிழகத்தில் அ. தி. மு க. ஆட்சியை நிலைகுலைக்க காங்கிரஸ் தலைமைப்பீடம் விரும்புமா என்பது இன்னொரு கேள்வி.

ஜனதாதள்ளில் இருந்து பிரிந்து சென்றவர்கள் ஆதரவு அளிப்பதாக உறுதியளித்திருப்பதால் மத்தியில் நரசிம்மராவ் ஜெயலலிதா கட்சியின் ஆதரவை இனிமேல் நம்பியிருககத் தேவையில்லை என்பது ஒரு சாரார் அபிப்பிராயம். ஜெயலலிதாவின் ஆட்சியை நிலைகுலைத்தால், அதையடுத்து தேர்தல் ஒன்று வரும்- தற்போது தமிழ்நாட்டில் அ- தி. மு க. காங்கிரஸ் கூட்டணிக்கு 39 லோகசபை எம். பி.க்கள் இருக்கிறார்கள். இந்தச் சாதகமான நிலையில் மாற்றம் ஏற்படுவதை மாற்ற மொத்தமாக 39 எம்- பி-க்கள் கூட்டணிக்கு இருக்கும் நிலையை மாற்றுவதற்கு நரசிம்மராவ் விரும்புவாரா? அரசியலில் முதிர்ச்சியும் சாதுரியமும் கொண்ட நரசிம்மராவ் இத்தகைய ஒரு காரியத்தில் இப்போது ஈடுபடுவார் என்று எதிர்பார்க்க முடியவில்லை.

தமிழ்நாடு காங்கிரஸிலே மூப்பனார் குழுவினர் ஏற்கனவே காமராஜ் ஆட்சியை ஏற்படுத்துவதற்கென்று புறப்பட்டு விட்டார்கள். இதற்கு காங்கிரஸ் மேலிடத்தின் சம்மதம் இல்லாமல் இருக்க முடியாது. அத்துடன் அடுத்து வரும் பெப்ரவரியில் தமிழகத்தில் காங்கிரஸ் அமைப்புத் தேர்தல்களும் நடைபெறவிருக்கின்றன. இப்போது காங்கிரஸில் வாழப்பாடி இராமமூர்த்தி குழுவினரே ஜெயலலிதாவுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். அமைப்புத் தேர்தல்கள் நடைபெற்ற பின் மூப்பனாரின் கையா வாழப்பாடியின் கையா ஓங்கும் என்பதையும் திட்டவட்டமாகக் கூற முடியவில்லை,

இந்த நிலையில் ஜெயலலிதாவை அடுத்த ஜனவரி 31க்கு முன்னர் பதவியில் இருந்து அகற்றிக் காட்டுகின்றேன் பார் என்று சுவாமி காலக்கெடுவும் சொல்லியிருக்கிறார் எதைமனதில்கொண்டு சுவாமி இதைச் சொன்னார் என்பதும் குழப்பமாயிருந்தது

தொடர்ச்சியாக தொந்தரவையும் கொடுத்து முடிந்த மட்டும் அ. தி. மு. க. வுக்குள் அதிருப்தியாளர்களையும் உருவாக்கினால் ஜெயலலிதா தானாகவே பதவியில் இருந்து இறங்கி விடுவார் என்று சுப்பிரமணிய சுவாமி கூறியதையும் இது விடயத்தில் கவனத்திலெடுக்கத் தவறக் கூடாது.

எது எவ்வாறெனினும் ஜெயலலிதாவுக்கு எதிரான தற்போதைய நடவடிக்கைகளுக்கு காங்கிரஸ் தேசிய தலைமைத்துவத்தின் ஆதரவு இருக்கிறது என்று அ. தி மு. க. வினரில் கணிசமானவர்கள் உணர்கிறார்கள் என்பது மட்டும் உண்மை.

## சுப்பிரமணியம் சுவாமி தமிழகத்தில் குடியேறுகிறார்

### - நெடுஞ்செழியன் தெரிவிப்பு

இந்தியாவின் தேசிய அரசியலில் செல்லாக் காசாகிவிட்ட ஜனதாக்கட்சித்தலைவர்டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தமிழகத்தில் குடியேறிவிட விரும்புகிறார் போலும் என்று தமிழக நிதியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கூறியிருக்கிறார்-

ஜெயலலிதாவை முதலமைச்சர் பதவியில் இருந்து அகற்றும் வரை தமிழ் நாட்டிலேயே இருக்கப் போவதாக சுப்பிரமணியம் சுவாமி கூறியிருப்பதை வேறு எவ்வாறுதான் அர்த்தப்படுத்திக் கொள்வது என்று நெடுஞ்செழியன் தெரிவித்தார்-

தமிழ் நாட்டில் பிளவுபட்டுப் போயிருக்கும் திராவிட இயக்கம் மீண்டும் ஐக்கியப் படக்கூடிய சாத்தியங்கள் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்-

## ஜெயலலிதாவிற்கு எதிராக ராவிடம் மகஜர் கையளிப்பு?

(சென்னை)

ஜெயலலிதாவை முதலமைச்சர் பதவியில் இருந்து அகற்றிவிட்டு எம் ஜி ஆர். ஆட்சியை மீண்டும் நிலை நாட்டுவதே ஜனதா கட்சி தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தமிழகத்தில் நடத்த ஆரம்பித்திருக்கும் போராட்டத்தினது நோக்கமாகும் என அ. தி. மு. க. விலிருந்து ஜெயலலிதாவினால் அண்மையில் வெளியேற்றப்பட்ட முன்னாள் அமைச்சரான கே. ராஜாராம் கூறியுள்ளார்.

ஜெயலலிதாவுக்கு எதிரான ஊழல் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண சிங்கிடம் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தலைமையில் கடந்த திங்கட்கிழமை மகஜர் ஒன்றைக் கையளித்து விட்டு பத்திரிகையாளரிடம் பேசுகையிலேயே ராஜாராம் இதைச் சொன்னார்,

ஜெயலலிதாவுக்கு எதிராக நான்கு விசேட ஊழல் குற்றச் சாட்டுக்கள் இம்மகஜரில் சுமத்தப்பட்டிருக்கின்றன என்றும், ராஜாராம் குறிப்பிட்டார்.

## அதிகாரப் பரவலாக்கலுக்கு 50 பேர் கொண்ட மேற் சபை

### - மங்கள முனசிங்கா ஆலோசனை

(கொழும்பு)

அதிகாரப் பரவலாக்கலை வலுப்படுத்த ஐம்பது உறுப்பினர் கொண்ட மேல் சபை ஒன்றை உருவாக்குவதற்கான யோசனை அடங்கிய ஆவணம் ஒன்றை பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவரான மங்கள முனசிங்க அக் குழு

அரசியல் கட்சிகளினால் நியமிக்கப்படுவர்-பாராளுமன்றத்தின் கீழ் சபையில் அரசியல் கட்சிகளுக்கு இருக்கும் எண்ணிக்கை பலத்தின் விகிதாசாரப்படி அவை உறுப்பினர்களை நியமிக்கலாம்.

எஞ்சிய மேல்சபை ஆசனங்

யாழ் பல்கலைக்கழக

## சித்த மருத்துவ துறைக்கு 30 மாணவர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

புதிய கல்வியாண்டு யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறைக்கு முப்பது மாணவ மாணவியர் நேற்று நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் போது தெரிவு செய்யப்பட்டனர்.

[illegible] செய்யுமாறு கோரப்பட்டுள்ளனர்.

இதேவேளை தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மகாபொல மற்றும் உதவிப் பணக் கொடுப்பனவுகளும் அவர்களது தகுதிக்கு ஏற்ப வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (05)

## சூழல் பாதுகாப்பு கருத்தரங்கு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் விவசாய சூழல் பாதுகாப்பு பகுதியினர் பல்வேறு மட்டத்திலும் சூழல் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றனர்.

இந்நடவடிக்கையின் தொடராக இன்று யாழ் மத்திய கல்லூரியிலும் நாளை காலை 9 மணிக்கு அரியாலை பாரதி வித்தியாசாலையிலும் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன

சாயிகள் விழா என்ற போர்வையில் ஓர் கொண்டாட்டத்திற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. பிரேமதாசா அரசாங்கத்தின் கொண்டாட்டங்கள் குறித்தும், அதன்மூலம் செய்யப்படும் பணவிரயங்கள் குறித்தும் எதிர்க்கட்சிகள் பலத்த கண்டனங்களை முன் வைத்துள்ள போதும் பிரேமதாசா அரசாங்கம் அதை அசட்டை செய்து வருகிறது.

இவ்வாறான விழாக்களினால் பிரேமதாசா அரசாங்கத்தின் கொண்டாட்டங்கள், பண விரயங்கள் எல்லாம் ஒரு புறம் இருக்க, போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிழக்குப் பகுதியிலும், வடக்கில் வவுனியா மாவட்டத்திலும் விவசாயிகள் தினவிழா கொண்டாட்டங்கள் நடைபெறும் என அரசாங்கம் அறிவித்தமை கேலிக்குரிய தொன்றேயாகும். அதாவது, தமிழ் மக்களிடம் இருந்து சிங்கள அரசாங்கம் எவ்வளவு தூரம் அந்நியப் பட்டுள்ளது என்பதை வெளிக்காட்டுவதுமாகும்.

வடக்கு - கிழக்கு விவசாயிகளில் பெரும்பாலானோர் இன்று தமது நிலையங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இலங்கையின் நெற் களஞ்சியம் என அழைக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று விவசாயக் காணிகள் கை விடப்பட்ட நிலையில் உள்ளன. தமிழ் மக்கள் வயல் நிலங்களுக்கு சென்று பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கு அஞ்சுகின்றனர். அதே வேளை, பாடுபட்டு, உயிரைப் பணயம் வைத்து மேற்கொள்ளும் பயிர்களுக்குரிய விளைச்சல்களும் வீடு வந்து சேருமா என்ற ஐயப்பாடு நிலவி வருகிறது. இதன் காரணமாக கிழக்கில் உள்ள பல நெல்குத்தும் அரிசி ஆலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்தளவிற்கு இராணுவக் கெடுபிடியும், முஸ்லிம் காடையர்களின் அடாவடித் தனமும், அட்டூழியமும் காணப்படுகின்றன.

இதேவேளை, அரசாங்கம் விதித்துள்ள பொருளாதாரத் தடையும், எரிபொருள் தடையும் வடக்கில் பயிர் செய்யக்கூடிய பாதுகாப்பான பகுதிகளில் உள்ள விவசாயிகளின் நடவடிக்கையை முடக்கிப்போட்டுள்ளன. விவசாயத்திற்குப் பயன் படும் முக்கிய பசளையான யூரியாவிற்கு விதிக்கப்பட்டுள்ள தடையானது உற்பத்தியைப் பெரிதாகப் பாதித்துள்ளதோடு, எரிபொருள்களுக்கு விதிக்கப்பட்ட தடையானது மேலும் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது. விவசாயிகள் தின விழாவை ஒட்டி வடக்கு - கிழக்கிலுள்ள விவசாயிகளும் உரவகைகளை குறைந்த விலையில் பெறலாம் என அரசாங்கம் அறிவித்துள்ள போதும் அதற்கான வாய்ப்புக்கள் எதுவும் செய்து கொடுக்கப்பட்டதாகவும் இல்லை.

அதாவது, ஓர் இன விவசாயிகளின் குரல் வளையை நெரிக்கும் சிங்கள அரசாங்கம் மறுபுறம் விவசாயிகளின் பெயரில் விழாவெடுக்கின்றது. ஆனால், இதுவும் பெயரளவில் மட்டுமே விவசாயிகளின் கொண்டாட்டமாக இருக்கும் உண்மையில் இது ஐக்கிய தேசியக்கட்சி தனது பிரசாரத்திற்காக அரசாங்க செலவில் எடுக்கும் விழாவாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

---

மியுடன் அணிசேர்ந்திருக்கின்றமை அ.தி.மு.க வுக்குள் அதிருப்தியாளர்கள் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்த்துவதாகவே உள்ளது.

ஜெயலலிகா கட்சியின் ஆதரவை இனிமேல் நம்பியிருக்கத் தேவையில்லை என்பது ஒரு சாரார் அபிப்பிராயம். ஜெயலலிதாவின் ஆட்சியை நிலைகுலைத்தால், அதையடுத்து

கிறார் எதைமனதில்கொண்டு சுவாமி இதைச் சொன்னார் என்பதும் குழப்பமாயிருந்தது.

தொடர்ச்சியாக தொந்தரவையும் கொடுத்து முடிந்த மட்டும் அ. தி. மு, க. வுக்குள்

ஜெயலலிதாவினால் அண்மையில் வெளியேற்றப்பட்ட முன்னாள் அமைச்சரான தே ராஜாராம் கூறியுள்ளார்.

ஜெயலலிதாவுக்கு எதிரான

நான்கு விசேட ஊழல் குற்றச் சாட்டுக்கள் இம்மகஜரில் சுமத்தப்பட்டிருக்கின்றன என்றும், ராஜாராம் குறிப்பிட்டார்.

---

# அதிகாரப் பரவலாக்கலுக்கு 50 பேர் கொண்ட மேற் சபை

## – மங்கள முனசிங்கா ஆலோசனை

(கொழும்பு)

அதிகாரப் பரவலாக்கலை வலுப்படுத்த ஐம்பது உறுப்பினர் கொண்ட மேல் சபை ஒன்றை உருவாக்குவதற்கான யோசனை அடங்கிய ஆவணம் ஒன்றை பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவரான மங்கள முனசிங்க அக் குழுவின் அங்கத்தவர்களின் பரிசீலனைக்கு சமர்ப்பித்திருப்பதாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் அதிகார பரவலாக்கல் திட்டம் ஒன்று வகுக்கப்படுமிடத்து அந்த அதிகாரப் பரவலாக்கலை வலுப்படுத்தவும், மத்திக்கும் மாகாணங்களுக்கும் இடையேயான தொடர்புகளை மேம்படுத்துவதற்குமே இந்த ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சமர்ப்பிக்கப்பட்ட இந்த ஆவணத்தின் பிரகாரம் உத்தேசமேல் சபை ஐம்பது உறுப்பினர்களை கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு மாகாணமும் இச்சபைக்கு மூன்று உறுப்பினர்களை தெரிவு செய்யலாம். அத்தகைய உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை நடத்துவதற்கான அலகாக மாகாணமே இருக்கும்.

எஞ்சிய 23 ஆசனங்களில் சிலவற்றுக்கு உறுப்பினர்கள் அரசியல் கட்சிகளினால் நியமிக்கப்படுவர்-பாராளுமன்றத்தின் கீழ் சபையில் அரசியல் கட்சிகளுக்கு இருக்கும் எண்ணிக்கை பலத்தின் விகிதாசாரப்படி அவை உறுப்பினர்களை நியமிக்கலாம்.

எஞ்சிய மேல்சபை ஆசனங்கள் (தொழில்சார் நிபுணர்கள், கல்விமான்கள் மற்றும் அபிவிருத்தி நிபுணர்கள் போன்ற) முன்னணி பிரஜைகளுக்கு ஒதுக்கப்படும் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருடன் ஆலோசனை கலந்து ஜனாதிபதி இவர்களை நியமிப்பார்

இதேவேளை மத்திய அரசுக்கும் மாகாணத்துக்கும் இடையேயான உறவுகளுடன் தொடர்புபட்ட விவகாரங்களில் ஒருங்கிணைப்புப் பணிகளை செய்யவும் மத்தியஸ்தம் வகிக்கவும் அதிகாரப் பரவலாக்கல் ஆணைக்குழு ஒன்றை அமைக்கவும் மங்கள முனசிங்க உறுப்பினர்களுக்கு விநியோகித்துள்ள ஆவணத்தில் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசாங்கத்தினாலும் மாகாணசபைகளினாலும் நியமிக்கப்படக் கூடிய உறுப்பினர்களை கொண்ட சுயாதீனமாக நிதிஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கான யோசனையும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி மாவட்டத்தில் தொழிற்பயிற்சி நெறி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு தொழிற் பயிற்சி நெறிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையும் இலங்கை செஞ்சிலுவைச்சங்கமும் இதற்கான ஏற்பாடுகளைக் கவனித்துவருகின்றன.

மிருக வைத்திய தொழில் நுட்பவியல், தட்டச்சு, பால் பதனிடல், தாதிப்பயிற்சி நெறி, எழுது வினைஞர், பயிற்சி, தச்சுத்தொழில், தையல் பயிற்சி ஆகிய பயிற்சி நெறிகளேஆரம்பிக்கப்படஉள்ளது.

பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு மாதாந்த உதவிப் பணம் வழங்கப்பட இருக்கிறது. (க)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை மத்தி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தை மீள இயக்குவதற்கான ஆரம்பக் கூட்டம் இன்று பிற்பகல் 2மணிக்கு ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள ஊர்காவற்றுறை பலநோ.கூ. சங்கப் பணிமனையில் நடைபெறும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதன் அங்கத்தவர்கள் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (பா)

---

யாழ் பல்கலைக்கழக

# சித்த மருத்துவ துறைக்கு 30 மாணவர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

புதிய கல்வியாண்டு யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறைக்கு முப்பது மாணவ மாணவியர் நேற்று நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் போது தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கானவிரிவுரை அடுத்த மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நேர்முகப் பரீட்சையில் தெரிவின் போது தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் அடுத்த மாதம் இரண்டாம்திகதிதம்மை யாழ் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளனர்.

இதேவேளை தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மகாபொல மற்றும் உதவிப் பணக் கொடுப்பனவுகளும் அவர்களது தகுதிக்கு ஏற்ப வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது (05)

## சூழல் பாதுகாப்பு கருத்தரங்கு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் விவசாய சூழல் பாதுகாப்பு பகுதியினர் பல்வேறு மட்டத்திலும் சூழல் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றனர்.

இந்நடவடிக்கையின் தொடராக இன்று யாழ் மத்திய கல்லூரியிலும் நாளை காலை 9 மணிக்கு அரியாலை பாரதி வித்தியாசாலையிலும் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன

# ஒய்வூதியர்கள் விபரங்களை உடன் வழங்கவும்

ஓய்வூதியர்களின் கொடுப்பனவுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் பிரதேச சபைகளுக்கு மாற்றப்படுவதை முன்னிட்டு கிராமசேவகர்கள் தமது பகுதிகளிலுள்ள ஓய்வூதியர்களின் விபரங்களை சேகரிக்கத் தொடங்கியுள்ளனர்,

மேற்படி மாற்றங்களினால் ஏற்படக்கூடிய தாமதங்களை தவிர்க்கும் பொருட்டு சகல ஓய்வூதியர்களும் தமது விபரங்களை உரிய முறையில் தாமதமின்றி தமது கிராமசேவை அலுவலர்களுக்கு கொடுத்து உதவுமாறு சகல ஓய்வூதியர்களையும் வடமாநில ஓய்வூதியர்கள் சம்மேளனம் ஆலோசனை வழங்கியுள்ளது.

அத்துடன் அதற்கான படிவங்களை தமது பிரதேச ஓய்வூதியர்கள் சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் சம்மேளனச் செயலாளர் திரு. பி. எஸ் திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

## குழந்தை

பம்பலப்பிட்டிப் பகுதியில் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருக்கும் குழந்தைப் பண்ணைகளில் இருந்து இந்த மத்திய நிலையத்திற்கு குழந்தைகள் அனுப்பி வைக்கப்படுவதாகவும். இங்கிருந்து குழந்தைகள் வெளிநாட்டுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

## தற்காலிக

கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளரின் பணிப்பின் பேரில் மாகாண சபைகள் அமைச்சின் ஆலோசகர் திரு. மார்க்கண்டு அவர்களால் மீள் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. (க), (பா)

## தொண்டராசிரியர்

வர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் இடம் சமர்ப்பித்து அவர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கும் படி சங்கம் வலியுறுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எல்லையோர

இதேவேளை எல்லைப்புற கிராமங்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வடக்கு கிழக்கு பகுதிக்கு பொறுப்பான முப்படை பொலிஸ் உயர் அதிகாரிகளை கேட்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலகு கடன்

ஆயுதங்கள், தோட்டாக்கள் என்பனவற்றை இலகு கடன் அடிப்படையில் வழங்குவதற்கு தயாராகவுள்ள தாகவும் தெரியவருகின்றது.

இந் நிலையில், சிறிலங்கா அரசாங்கம் பொருத்தமான தளபாட வளங்களைத் எந்த நாட்டிடம் இருந்து கொள்வனவு செய்வது என்பதுகுறித்து தீவிரமாகச் சிந்தித்து வருகின்றது. கடந்த காலத்தில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிடம் கொள்வனவு செய்த ஆயுத தளபாடங்களுக்கு உதிரிப்பாகங்கள் பெறுவதில் எழுந்த நெருக்கடியால், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிடம் இருந்து ஆயுதம்கொள்வனவு செய்வதை சில அதிகாரிகள்விரும்பவில்லை எனத் தெரியவருகின்றது.

ஆகையினால்சீனாவிடம்ஆயுதம் வாங்குவதற்குரிய சூழ்நிலையே அதிகம் உள்ளதாக இராணுவ வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்ற அதே வேளை, சீனாவில் கொள்வனவு செய்யப்பட்ட பீரங்கி கப்பல்கள் சேவையில் ஈடுபட முன்னரே பழுதாகிப் போனதையும் சில இராணுவ அதிகாரிகள் சுட்டிக் காட்டியதாகவும் தெரியவருகின்றது.

# புதிய

## பயிற்சிநெறிகள்

வவுனியா பல்கலைக்கழகக் கல்லூரியில் மேலும் இருபுதிய பயிற்சி நெறிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படஉள்ளது.

ஏற்கனவே மூன்று பயிற்சி நெறிகள் இக்கல்லூரியில் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. இத்துடன் இப்புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

# தீபாவளி பரிசில்கள்

மாவீரன் வீரவேங்கை கஸ்ரோ (சுப்பிரமணியம் கமலநாதன்) நினைவாக அவரது குடும்பத்தினர் சைவ வித்தியா விருத்திச் சங்க நிறைவாழ்வு இல்ல சிறார்களுக்கு தீபாவளிப்பரிசில்களை வழங்க முன்வந்துள்ளனர்.

எதிர்வரும் சனிக்கிழமை மாலையில் நடைபெறும் ஆடம்பரமற்ற நிகழ்ச்சி ஒன்றில் இப்பரிசில்கள் வழங்கப்பட இருப்பதுடன், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க மண்டபத்தில் வீரவேங்கை கஸ்ரோ நினைவாக தீபாவளிக் கதம்பம் ஒன்றும் கலை நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளது.

ஈழநாதம்

# சீனாவிற்கு ரஷ்யா ஆயுத உதவி; அமெரிக்காவுக்கு வருத்தமாம்

## - நியூயோர்க் ரைம்ஸ் தகவல்

(வாஷிங்டன்)

ஏவாயுத வழிகாட்டல் தொழில் நுட்பம், ராக்கெட் என்ஜின்கள், இதர நவீன ஆயுதமுறைகள் ஆகியவற்றை ரஷ்யா சீனாவுக்கு விற்பனை செய்வதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர் என நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது-

சீனாவுக்கான இந்த ஆயுத ஏற்றுமதி கவலையளிப்பதாகவும், ஆயுதப் பரவல் முயற்சியை சீர்குலைப்பதாகவும் புஷ் நிர்வாக அதிகாரிகள் கூறுவதாக அது மேலும் தெரிவித்துள்ளது-

ரஷ்யாவின் இந்த நவீன தொழில் நுட்பத்தை சீனா இதர மூன்றாம் உலக நாடுகளுக்கு மறு விற்பனை செய்யக் கூடும் என வாஷிங்டன் அஞ்சுகிறது-

உயர் தொழில்நுட்ப சக்தியை சீனா அடைந்த பின் அது என்ன செய்யும் என்பது எவருக்கும் தெரியாது என ஒரு அமெரிக்க அதிகாரி கூறினார்-

ஆயுத விற்பனை மட்டுமன்றி யூரேனியத்தை வளப்படுத்தும் தொழில் நுட்பத்தையும் மொஸ்கோ சீனாவிற்கு விற்பதாக அவர் மேலும் கூறினார்-

ரஷ்ய ஆயுத விற்பனை குறித்து மொஸ்கோவிற்கும் சீனாவிற்கும் அமெரிக்கா புகார் தெரிவித்திருப்பதாக மற்றோர் அதிகாரிதெரிவித்தார்-

ரொக்கமாகப் பணம் கொடுத்து ஆயுதங்களை வாங்கக் கூடிய நாடுகளை ரஷ்யா நாடி வருவதாகவும் கூறப்பட்டது-

டாங்கிகளையும், டாங்கி தொழில் நுட்பத்தையும் மட்டுமன்றி 24'' எஸ்-யூ 27'' சண்டை விமானங்களையும் பெட்ரியாட் ஏவுகணையைப் போன்று விமானங்களைச் சுடும் ''எஸ்-300'' பூமியிலிருந்து வானத்துக்குச்செல்லும் ஏவாயுதங்களையும் ரஷ்யா சீனாவுக்கு விற்றிருப்பதாகக் கூறப்பட்டது-


கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி

## கேள்வி அறிவித்தல்

## இரத்தினபுரம் வீதி திருத்த வேலை பகுதி 1, 2

மேற்படி வீதி திருத்த வேலைக்கான கேள்விகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப் படுகின்றது. ஒப்பந்தகாரர் எமது அலுவலகத்தில் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் ரூ 500/-ம் மீளளிக்க முடியாத கேள்விப் பத்திரப்பணம் ரூபா 250/- செலுத்துவதன் பேரில் 2-11-1992ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.

கேள்விப் படிவங்கள் பகுதி 1, 2ற்கு தனித்தனியாக வழங்கப்படும் ஒவ்வொரு பகுதி வேலைக்கும் தனித் தனியாக வைப்புப் பணம், கேள்விப்பத்திரப்பணம் மேலே குறிப்பிட்டவாறு செலுத்திப் பெறப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் முறைப்படி பூரணப்படுத்தி 6-11-1992ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பு எமது அலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக பதிவஞ்சல் மூலமோ அல்லது அதற்கென பிரத்தியேகமாக எமது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியிலோ இடப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''இரத்தினபுரம் வீதி திருத்த வேலைக்கான கேள்வி பகுதி 1/2. 1992'' என எழுதப்பட்டு ''விசேட ஆணையாளர், கரைச்சிப் பிர


### வடக்கு

வெகுஜனத் தொடர்பாளர்களைத் தாக்கியவர்களின் இரத்தக்கறைபடிந்த கரங்களை கழுவிவிடுவதற்கு அரசாங்கம் இப்போது முயன்றுவருகிறது. வெகுஜனத் தொடர்பாளர்களை மாத்திரமல்ல எதிரணி அரசியல் வாதிகள், புத்திஜீவிகள் மற்றும் இளைஞர்கள் ஆகியோரின் பின்னே மோப்ப நாய்களைப்போன்று கொலையாளிகள் சுற்றி அலைகின்றனர்.

பதவி ஆசைக்காக அரசாங்கத்துக்கு பந்தம் பிடிக்காது குறுகிய அரசியல் லாபத்தைக் கருத்தில் கொள்ளாது ஐக்கிய தேசியக் கட்சியைப் பதவியிலிருந்து அப்புறப்படுத்த அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும் என்றார்.

### பாடசாலை

அவரையும் பழைய மாணவராகக் கருதி அவரின் பிள்ளைகளுக்கு அனுமதியில் சலுகை வழங்க வேண்டும் என்றும்,

ஆறாம் ஆண்டுக்கு மாண

### ஓய்வூதியம்

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம்பெறுவோருக்கான ஒக்டோபர் மாதக் கொடுப்பனவு இன்று தொடக்கம் யாழ். அடைக்கல மாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படும் என அதன் முகாமையாளர் தெரிவித்துள்ளார். (22)

### சிங்கள

கண்ணுக்கெட்டிய தொலைவில் சிலர் நடந்து செல்வது தெரிந்தது அப்போது அவர்களை நோக்கி ''அண்ணே'' ''அண்ணே'' என்று கூப்பிட்டோம் அது அவர்களுக்கு கேட்கவில்லை மேலும் சிறிது நேரத்தில் திடீரென சிங்கள சினிமா பாட்டு காதில் கேட்டது அப்போதுதான் நாம் ஆனையிறவு முகாம் எல்லையில் இருப்பதை எம்மால் உணர முடிந்தது என்று தெரிவித்தார்.

இதன் பின்னர் மீண்டும் கடலில் இறங்கி கால் நடையாக புலோப்பளைக் கரையை வந்தடைந்தோம் என மேலும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இவர்களது படகிற்கு முன்பாகச் சென்று கொண்டிருந்த மற்றைய பயணிகள் படகு ஆபத்து எதுவுமின்றிஆலங்கேணிக்கரையைச் சென்றடைந்ததாக நேற்று மாலை எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (82)

### குமண

இத்துறையை வந்தடைந்தது.

இக்கப்பலில் எடுத்துவரப்பட்ட பொருள்களை இறக்கும் பணிகள் நேற்றும் இன்றும் தொடர்ந்து மேற்கொள்ளப் படுவதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### மண்டைதீவில்

னிக்க முடிந்தது இதைப் பார்த்துக் கொண்டு நின்ற மேற்படி பகுதியைச் சேர்ந்த மக்கள் மண்டைதீவில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அங்குள்ள வீடுகளை எரிக்கின்றனர் என பேசிக்கொண்டனர். (பா)


## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

## 20 - 10 - 92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 6206

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்

27-2016, 28-4381, 26-7187, 24-1983, 24-5092, 28-6020, 26-736, 26-1326, 27-8149, 24-9938, 24-8558, 26-2585, 27-5482, 26-6309, 26-5782.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:

22-9005, 42-1325, 24-4481, 27-9105, 26-7525, 42-0488, 27-6821, 26-6796, 22-3611, 41-6133, 28-9677, 42-9625, 24-0521, 24-5454, 26-3118, 26-6775, 24-6545, 26-5563, 26-3410.



கமத்தொழில் காப்புறுதிச் சபையினால் செயற்படுத்தப்படும் விவசாயிகள் ஓய்வூதியச் சமூகப்பாதுகாப்பு

## நலன் திட்டம்

### இலங்கைவாழ் விவசாயப்பெருமக்களுக்கு ஓர் அரிய திட்டம்

★ 18 வயது முதல் 59 வயதினர் வரையான விவசாயத்தில் முழுநேரமாகப் பாடுபடும் (விவசாயத் தொழிலாளர் உட்பட) அனைவரும் இத்திட்டத்தில் சேரலாம்.

★ 45 - 59 வயதிற்கிடைப்பட்டவர்கள் இத்திட்டத்தில் 31 - 12 - 1992 இற்குப்பின்னர் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

★ 60 வயது பூர்த்தியானவுடன் தமது மாதாந்த ஓய்வூதியத்தை அண்மையிலுள்ள தபால் அலுவலகத்தில் தொடர்ந்து பெற்றுக் கொள்ளலாம்.

★ உறுப்பினருக்கு ஏற்படக்கூடிய பூரண அல்லது ஓரளவு இயலாமையின்போதும் மரணம் போன்ற துன்பியல் நிகழ்வுகளின் போதும் பணிக்கொடை வழங்கப்படும்.

★ உறுப்பினர் ஒருவர் முழுத்தவணைப்பணத்தையும் ஒரேதடவையில் செலுத்தும்போது அவரவர் வயதிற்கேற்ப 50% முதல் 14.5% வரையிலான கழிவு வழங்கப்படும்.

★ இத்துடன் பனை அபிவிருத்திச் சபையினர் விடுத்த வேண்டுகோளையடுத்து பகுதி நேரமாக விவசாயத்தில் ஈடுபடும் சீவல் தொழிலாளர்களும் விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் சேர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயி ஒருவரின் நலன்கள் பாதிக்கப்படும்போது பணிக் கொடை நலன்கள் பின்வருமாறு வழங்கப்படுகின்றன.

| சம்பவத்தேதியில் வயது | பூரண இயலாமை நலன் (ரூபா) | ஓரளவு இயலாமை நலன் (ரூபா) | மரண நன்கொடை (ரூபா) |
|---|---|---|---|
| 18 — 30 | 50,000.00 | 25,000.00 | 25,000.00 |
| 31 — 35 | 40,000.00 | 20,000.00 | 20,000.00 |
| 36 — 40 | 30,000.00 | 15 000.00 | 15,000.00 |
| 41 — 45 | 20,000.00 | 10,000 00 | 10,000.00 |
| 46 — 60 | 12,000.00 | 6,000 00 | 6,000 00 |

★ ★ மேலதிக விபரங்களுக்கு:

உங்கள் பகுதி கமநலசேவை நிலையத்தை அல்லது அண்மையிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கிக் கிளையை, அல்லது நல்லூர் கமநல சேவைகள் நிலையக் கட்டிடத்தில் அமைந்துள்ள யாழ் மாவட்டக் கமத்தொழில் காப்புறுதிச் சபை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உதவிப் பணிப்பாளர்
கமத்தொழில் காப்புறுதிச்சபை,
கமநலச்சேவைகள் நிலையக் கட்டிடம்,
பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். 20-10-92 [சி-5263]



## கரைச்சிப் பிரதேச சபை - 1993-ம் ஆண்டுக்கான சந்தை

## இறைச்சிக் கடைகள் கேள்வி அறிவித்தல்

01-01-1993-ம் திகதி தொடக்கம் 31-12-1993-ம் திகதி வரைக்கான காலப்பகுதிக்கு கீழ்க் குறிப்பிட்டிருக்கும் குத்தகைகள் சார்பில் கேள்விகள் 27-11-1992-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி அலுவலகத்தில் 20-11-1992-ம் திகதி 12-00 மணிவரை கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணத்தையும், படிவக்கட்டணத்தையும் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளில் ''விசேட ஆணையாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி'' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும், மேலதிக விவரங்களையும், அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்

ளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் ரு 500/-ம் மீளளிக்க முடியாத கேள்விப் பத்திரப்பணம் ரூபா 250/- செலுத்துவதன் பேரில் 2-11-1992ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.

கேள்விப் படிவங்கள் பகுதி 1, 2ற்கு தனித்தனியாக வழங்கப்படும் ஒவ்வொரு பகுதி வேலைக்கும் தனித் தனியாக வைப்புப் பணம், கேள்விப்பத்திரப்பணம் மேலே குறிப்பிட்டவாறு செலுத்திப் பெறப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் முறைப்படி பூரணப்படுத்தி 6-11-1992ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பு எமது அலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக பதிவஞ்சல் மூலமோ அல்லது அதற்கென பிரத்தியேகமாக எமது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியிலோ இடப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''இரத்தினபுரம் வீதி திருத்த வேலைக்கான கேள்வி பகுதி 1/2. 1992'' என எழுதப்பட்டு ''விசேட ஆணையாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி'' என விலாசமிடப்படல் வேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை அலுவலக நாளில், அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

செல்வி நா. இந்துமதி,
விசேட ஆணையாளர், கரைச்சிப் பிரதேச சபை,
(சி-5258) கிளிநொச்சி.

கள் மற்றும் இளைஞர்கள் ஆகியோரின் பின்னே மோப்ப நாய்களைப்போன்று கொலையாளிகள் சுற்றி அலைகின்றனர்.

பதவி ஆசைக்காக அரசாங்கத்துக்கு பந்தம் பிடிக்காது குறுகிய அரசியல் லாபத்தைக் கருத்தில் கொள்ளாது ஐக்கிய தேசியக் கட்சியைப் பதவியிலிருந்து அப்புறப்படுத்த அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும் என்றார்.

## பாடசாலை

அவரையும் பழைய மாணவராகக் கருதி அவரின் பிள்ளைகளுக்கு அனுமதியில் சலுகை வழங்க வேண்டும் என்றும்,


ஆறாம் ஆண்டுக்கு மாணவர்களை அனுமதித்தலில் பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்கும், தற்போது கல்வி பயிலும் பிள்ளைகளின் சகோதரர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சலுகையை இரண்டு பகுதியினருக்கும் 25 விகிதம் பெறக் கூடியதாக இருக்க வேண்டும் என்றும் அதிபர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

துக் கொண்டு நின்ற மேற்படி பகுதியைச் சேர்ந்த மக்கள் மண்டைதீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அங்குள்ள வீடுகளை எரிக்கின்றனர் என பேசிக்கொண்டனர். (பா)

சபை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உதவிப் பணிப்பாளர்
கமத்தொழில் காப்புறுதிச்சபை,
கமநலச்சேவைகள் நிலையக் கட்டிடம்,
பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். 20-10-92 [சி-5263]

# நெஞ்சை விட்டகலா
# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. தொமஸ
பேரின்பநாயகம்
வஸ்தியாம்பிள்ளை
(வஸ்தியன் புத்தகசாலை உரிமையாளர்)
பிறப்பு ;
22 - 09 - 1921



திருமதி மேபாள
அரியமலர்
வஸ்தியாம்பிள்ளை
பிறப்பு :
11 - 07 - 1927



செல்வி
நோயலா விஜயந்தி
வஸ்தியாம்பிள்ளை
பிறப்பு :
04 - 02 - 1967

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அரக்கத்தனமான
அழிப்பு 22-10-1987 அழிப்பு 21-10-1987

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

திருப்பலிகள் ; 22-10-92 காலை 5-45 மணிக்கு ஆசனக் கோவிலும்
23-10-92 காலை 6-15 மணிக்கு பாஷையூர் அந்தோனியார் கோவிலிலும்
ஒப்புக்கொடுக்கப்படும்

உங்கள் பிரிவால் துயருறும்
அன்புப் பிள்ளைகள். மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரசகோதரிகள்

390, பிரதானவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் (3495)

# கரைச்சிப் பிரதேச சபை-1993-ம் ஆண்டுக்கான சந்தை
# இறைச்சிக் கடைகள் கேள்வி அறிவித்தல்

01-01-1993-ம் திகதி தொடக்கம் 31-12-1993-ம் திகதி வரைக்கான காலப்பகுதிக்கு கீழ்க் குறிப்பிட்டிருக்கும் குத்தகைகள் சார்பில் கேள்விகள் 27-11-1992-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி அலுவலகத்தில் 20-11-1992-ம் திகதி 12-00 மணிவரை கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணத்தையும், படிவக்கட்டணத்தையும் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளில் ''விசேட ஆணையாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி'' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும், மேலதிக விவரங்களையும், அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்

அட்டவணை

| குத்தகை விபரம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| **கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி உப அலுவலகம்** | | | |
| 1 கிளிநொச்சிச் சந்தை | ரு 150, 500 | ரு 1, 000 | ரு 100 |
| 2 பரந்தன் சந்தை | ரு 20, 000 | ரு 500 | ரு 50 |
| 3 கிளிநொச்சி மாட்டிறைச்சிக் கடை | ரு 100, 250 | ரு 1, 000 | ரு 100 |
| 4 '' ஆட்டிறைச்சிக் கடை | ரு 50, 200 | ரு 500 | ரு 50 |
| 5 பரந்தன் மாட்டிறைச்சிக் கடை | ரு 30, 000 | ரு 500 | ரு 50 |
| **முரசுமோட்டை உப அலுவலகம்** | | | |
| 1 முரசுமோட்டைச் சந்தை | ரு 3, 200 | ரு 100 | ரு 50 |
| 2 வட்டக்கச்சிச் சந்தை | ரு 7, 100 | ரு 250 | ரு 50 |
| 3 டீ. 10 உருத்திரபுரம் சந்தை | ரு 4, 750 | ரு 100 | ரு 50 |
| 4 டீ. 8 உருத்திரபுரம் சந்தை | ரு 1, 250 | ரு 100 | ரு 50 |
| 5 தருமபுரம் சந்தை | ரு 900 | ரு 100 | ரு 25 |
| 6 ஜெயந்தி நகர் சந்தை | ரு 1, 850 | ரு 100 | ரு 50 |
| 7 ஸ்கந்தபுரம் சந்தை | ரு 600 | ரு 100 | ரு 50 |
| 8 கண்டாவளைச் சந்தை | ரு 100 | ரு 50 | ரு 15 |
| 9 ஆனையிறவுச் சந்தை | ரு 100 | ரு 50 | ரு 15 |
| 10 இரணைமடுச் சந்தை | ரு 1, 000 | ரு 100 | ரு 50 |
| 11 கனகபுரம் சந்தை | ரு 7, 100 | ரு 100 | ரு 50 |
| **மாட்டிறைச்சிக் கடைகள்** | | | |
| 1 முரசுமோட்டைக் கடை இல. 1 | ரு 1, 700 | ரு 100 | ரு 50 |
| 2 முரசுமோட்டைக் கடை இல. 2 | ரு 1, 750 | ரு 100 | ரு 50 |
| 3 டீ. 10 உருத்திரபுரம் | ரு 1, 750 | ரு 100 | ரு 50 |
| 4 வட்டக்கச்சிச் சந்தை | ரு 13, 750 | ரு 500 | ரு 50 |
| 5 டீ 8 உருத்திரபுரம் | ரு 4, 500 | ரு 100 | ரு 50 |
| 6 கனகபுரம் | ரு 5, 200 | ரு 250 | ரு 50 |
| 7 திருநகர் | ரு 3, 500 | ரு 100 | ரு 50 |
| 8 ஸ்கந்தபுரம் | ரு 1, 100 | ரு 100 | ரு 50 |
| 9 தருமபுரம் | ரு 5, 100 | ரு 250 | ரு 50 |
| 10 ஆனையிறவு | ரு 1, 000 | ரு 100 | ரு 25 |
| 11 சேவிஸ் வீதி | ரு 5, 000 | ரு 100 | ரு 50 |
| 12 இரணைமடுச் சந்தி | ரு 10, 000 | ரு 100 | ரு 50 |
| 13 லக்சபானா | ரு 3, 000 | ரு 100 | ரு 50 |
| 14 கோவிந்தன் கடைச் சந்தி | ரு 5, 250 | ரு 100 | ரு 50 |
| **ஆட்டிறைச்சிக் கடைகள்** | | | |
| 1 டீ. 10 உருத்திரபுரம் | ரு 2, 200 | ரு 100 | ரு 50 |
| 2 கனகபுரம் ஆட்டிறைச்சிக் கடை | ரு 3, 100 | ரு 100 | ரு 50 |
| 3 ஸ்கந்தபுரம் '' | ரு 3, 100 | ரு 100 | ரு 50 |
| 4 வட்டக்கச்சி '' | ரு 5, 200 | ரு 100 | ரு 50 |
| 5 சேவிஸ் வீதி '' | ரு 1, 000 | ரு 100 | ரு 50 |
| 6 இரணைமடுச்சந்தி '' | ரு 1, 000 | ரு 100 | ரு 50 |

செல்வி நா. இந்துமதி
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி.

(சி-5259)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.